முருகப்பெருமான் துணை

**மகான் வரரிஷி அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.08.2023**, திங்கட்கிழமை

1. தவபலம் கொண்டு பேருலகில்
தருமம் வளர்க்க வந்த
அவதார ஆறுமுக ஞானியே
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது யாளி திங்கள்
குறைவிலா லாப திகதி சோம வாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 11 ம் நாள், 28.08.2023, திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகன் கேட்க வரரிஷியானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை வழி காட்டும் அரங்கன்
ஞானமே கலியிடர் போக்கும்
நம்பகமான மார்க்கம் ஆகும்
4. ஆகவே அரங்கன் திருவடி பற்றி
அறிவிப்பேன் உலக மக்கள்
வகையான பிரணவக் குடிலை
வலம்வந்து அகலாத தொண்டு
5. தொண்டு செய்து வருவதுடன்
தொடர் தருமம் புரிந்திட
உண்டான தரும வேலிக்குள்
உலகமக்கள் ஒன்று சேர்ந்து
6. சேர்ந்துமே அரங்கா முருகா என
செபதபங்கள் செய்து கொண்டு
சேர்ந்துமே உலக சேமம் வேண்டி
சேவைகளை அன்னதானம் வழி

7. வழிதனில் எங்கும் பரப்பி
வழிமொழிந்து சன்மார்க்கம்
அழியாமையின் மகாசக்தியென
அனுகி அனுபவித்து தொடர
8. தொடரவே மகா ஞானிவழி
திருவருள் பலமும் கிட்டி
இடரில்லா ஞான வாழ்வு
எல்லாம் அரங்கன் செயலென
9. என சரணாகதி பெருகிட
இந்த உலகமெங்கிலும் மாற்றம்
ஞானமாக மாற்றம் அரங்கன்
நம்பிக்கை பலமாகக் கூடி
10. கூடியே ஞானவான்கள் படை
குடிலில் துவங்கி உலகமெலாம்
ஓடியோடி சக்தி பெருகியே
ஓங்காரன் ஆசிஅருளாக வந்து
11. வந்துமே உலக மாற்றம்
வடிவேலன் துணைகூடிட
எந்தவித எதிர்ப்பும் இன்றி
இனிதே ஆட்சி ஞானபலமாகும்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–